[21st November 1963

provided in the scheme itself. With the implementation of the Master Plan for the city, it is expected some control over such conversions will be possible.

Residential areas in Madras City

* 405 *Q.*—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) which are residential and non-residential areas in Madras City; and

(*b*) the details of the classifications?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*) A statement showing the zoning of areas and the details of classification is placed in the Legislature Secretariat Library.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், குடியிருப்புப் பகுதிகளில், வாடகைக்காக ஆசைப்பட்டு அநேகம் பேர் கடைகளை வைத்து விடுகிறார்கள். அதனால் நெருக்கடி ஏற்பட்டு சுகாதார நிலைமை பாதிக்கப்படுகிறது. ஆகவே குடியிருப்புப் பகுதிகளில் இனி மேலாவது கடைகள் ஏற்படாமல் இருக்க விதி செய்யப்படுமா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: My answer to the main question would cover the supplementary question put by the hon. Member.

காகிதத் தொழிற்சாலைகள்

* 406 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நாட்டில் எங்கெங்கு காகிதத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) இவ்வாறு அனுமதி வழங்கப்பெற்ற தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள் அருகில் அமைந்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) During 1963 three licences have been granted to set up paper mills one at Pettavaithalai in Tiruchirappalli district another at Nambivayal in Thanjavur district and the third in the same district.

(இ) There is no such stipulation in the industrial licence.

பிளாஸ்டிக் தொழிற்சாலை

* 407 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடி தாலூகாவில் உள்ள ஆதனக்கோட்டை, பாப்பான் விடுதி, வல்லத்திராகோட்டை, திருவரங்குளம் போன்ற பகுதியில் முந்திரி அதிகமாக விளைகின்ற காரணத்தினால் அங்கு ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.